பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை,
சென்னை – 6 அவர்களின் செயல்முறை ஆணை.

**முன்னிலை: மருத்துவர். டி. எஸ். செல்வவிநாயகம், எம்டி., டிபிஎச்., டிஎன்பி.,**

ந.க.எண்.35964/ப.தொ.4/2019/இரு3, நாள் : 29.11.2024.

பொருள்: பொது சுகாதாரம்– பணியாளர் தொகுதி – பொது சுகாதாரம்– தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருமதி. ரா. ஏஞ்சலின் ஷீபா தா/பெ (அமரர்) திருமதி. ரா. மைதிலி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம்– பணிவரன்முறைப்படுத்துதல் – ஆணை பிறப்பித்தல்–தொடர்பாக.

பார்வை:

1. இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.35964 /ப.தொ.4/ 2019/இரு3, நாள்: 13.01.2023.
2. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை,நாள்:08.03.2023.
3. இவ்வலுவலக ந.க.எண். 35964 /ப.தொ.4/ 2019/இரு3, நாள். 11.03.2024.
4. அரசு கடித எண். 6615552/ஏபி1/2024–1, மருத்துவம்– மக்கள் நல்வாழ்வுத்துறை, நாள். 28.08.2024.

*******

**ஆணை:**

இத்துறையில் செங்கல்பட்டு சுகாதாரப்பகுதி மாவட்டம், அச்சிறுபாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கிராம சுகாதார செவிலியராக திருமதி. ரா. மைதிலி என்பவர் பணிபுரிந்து வரும்போது 26.02.2009 தேதியன்று காலமாகியுள்ளார். அவருடைய மகள் திருமதி. ரா. ஏஞ்சலின் ஷீபா என்பவர் பார்வை ஒன்றில் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அலுவலகத்தில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். அந்நியமன ஆணையின்படி 03.02.2023 **முற்பகல்** முதல் பணியில் இணைந்து பணிபுரிந்து வருகிறார். இத்தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை அவர் பணியில் இணைந்த நாளான 03.02.2023 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தப்படவேண்டும்.

2. இந்நேர்வில் பார்வை இரண்டில் காணும் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு குடிமைப் பணிகள் ( கருணை அடிப்படையில் பணிநியமனம்) விதிகள் 2023–ல் பத்தி எண். (16) –ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளரின் பணியினை சம்பந்தப்பட்ட நியமன அதிகாரி அவரளவிலேயே அப்பணியாளர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறைப்படுத்த வேண்டும் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

3. எனவே, இந்நேர்வில் கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி. ரா. ஏஞ்சலின் ஷீபா என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை, பார்வை நான்கில் காணும் அரசு கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும் மற்றும் அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, நாள்:08.03.2023, பத்தி எண்.16-ல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள் / விதிமுறைகளுக்குட்பட்டும் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் (தமிழ்நாடு சட்டம் 14/2016) பிரிவு 28 (1) இன் படியும், அவர் பணியில் சேர்ந்த நாளான 03.02.2023 **அன்று முற்பகல்** முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு தனியரின் தற்காலிக பணியினை அவர் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் 03.02.2023 **முற்பகல்** முதல் பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4) தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் (தமிழ்நாடு சட்டம் 14/2016) பிரிவு 28 (1) இன் படி தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்ட 03.02.2023 முற்பகல் முதல் மூன்றாண்டுகால தொடர்பணியில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவ நிலையில் அமர்த்தப்படுகிறார்.

5) தனியர் அரசுப் பணியாளர் பயிற்சி நிலையம், பவானிசாகரில் அளிக்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான பயிற்சியினை தகுதிகாண் பருவம் முடிப்பதற்குள் முடித்திடல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்.

**தி. சி.செல்வவிநாயகம்,**
இயக்குநர்,
பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு
மருந்துத்துறை, சென்னை-6.

பெறுநர்
திருமதி. ரா. ஏஞ்சலின் ஷீபா, இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம்.
(தனியரின் கீழ்கண்ட அசல் சான்றுகள் இத்துடன் இணைத்து தனியரிடம் ஒப்படைக்கப்படுகின்றது. அதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை அளிக்குமாறு தனியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

1. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் ( வ.எண். 1040932)
2. மாற்றுச்சான்றிதழ் 943/2017-18.

நகல்: இவ்வலுவலக ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்பு பிரிவு.
(தனியரின் பணிவரன்முறை தொடர்பான உத்தரவினை தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது).

நகல்: மாவட்ட சுகாதார அலுவலர், சுகாதாரப்பகுதி மாவட்டம், செங்கல்பட்டு.
( மறைந்த அரசு ஊழியரான (அமரர்) திருமதி ரா. மைதிலி
( கிராம சுகாதார செவிலியர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
அச்சிறுபாக்கம், சுகாதாரப்பகுதி மாவட்டம், செங்கல்பட்டு –
26.02.2009ல் இறப்பு) என்பவரின் பணிப்பதிவேடு 1 மற்றும் 2 தொகுதி
இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. பணிப்பதிவேட்டினை பெற்றுக்
கொண்டமைக்கான ஒப்புகையினை அனுப்பிவைக்குமாறு
கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

நகல்: இப்பிரிவு இருக்கை 6.
இருப்பு கோப்பு–1/உபரி –1.

//உண்மை நகல் உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

தே.நி. கண்காணிப்பாளர்.
5/12/24

5/12/2024